ராணி காமிக்ஸ்

007 ஜேம்ஸ்பாண்ட் துப்பறியும்,

ரகசிய மாநாடு!

முதல் பாகம்.

15 சக்தி வாய்ந்த மூலிகைகள்,
பரவசமூட்டும் தேங்காய் எண்ணெயின் நுரைவளம்.
பாவையர் மனங்கவரும் தாழம்பு நறுமணம்.



மெடிமிக்ஸ்

ஆயுர்வேத டாய்லட் சோப்பு

CHOLAYIL PHARMACEUTICALS, MADRAS

ZEST/MS/113

ராணி காமிக்ஸ்—65
(மாதம் இருமுறை இதழ்)

TV

மார்ச் 1—14
1987

007 ஜேம்ஸ் பாண்ட் துப்பறியும், ரகசிய மாநாடு!

007
ஜேம்ஸ்பாண்ட்

உளவுத்துறை
தலைவர்
மிஸ்டர் 'எம்'

மிஸ்டர்
வில்லியம்

அரியட்னே

நிக்கோ

மணிப்பென்னி


லண்டன் நகரில் உள்ள வின்ட்சார் பார்க் பகுதி. அங்கே கார், மற்றும மரங்களின் மறைவில் 3 பேர் நின்றார்கள். கடைசியில் அவர்கள் எதிர்பார்த்த தகவல் வந்தது.
கோல்ப் மைதானத்தில் இருந்து புறப்பட்டு விட்டான். இது சரியான நேரம். உடனே புறப்படுங்க!
நாம் ஏற்கனவே 50 நிமிடம் தாமதம். உடனே கிளம்புவோம்!
சிறிது நேரம் கழித்து 3–வது உலகப் போரை ஏற்படுத்தக்கூடிய செயலில் ஈடுபட, அவர்கள் ஒரு வீட்டை நெருங்கினர்.
வேவு வீரர் 007 ஜேம்ஸ் பாண்ட், கோல்ப் விளையாடிவிட்டு, வின்ட்சார் பார்க் பகுதியை நோக்கி போய்க் கொண்டு இருந்தார்.
திருடப்பட்ட ஒரு போர்ட் காரில், அவரை ஒருவன் பின் தொடர்ந்தான். அது 007–க்கு தெரியாது!


அதே நேரத்தில் கிரேக்க தீவு ஒன்றில்-
டியர்! விதியோ அல்லது வினையோ நான் ஜேம்ஸ் பாண்டை சந்திப்பது உறுதி ஆகிவிட்டது!

இங்கிலாந்து உளவுத்துறை தலைவர் மிஸ்டர் மைல்ஸ் என்ற மிஸ்டர் எம், உடல் நலம் இல்லாமல் வீட்டில் ஓய்வு எடுத்தார். ஜேம்ஸ் அவரைப் பார்க்க வந்தார்.

வீட்டில் தொங்கிய மணியை ஜேம்ஸ் அடிததார்.

எம்மின் உதவியாளர் ஹாமண்ட், அவர் மனைவி எவரிடம் இருந்தும் பதில் இல்லை. சந்தேகம் கொண்ட 007-
ஹாமண்ட்....?

நூல் நிலையம் உள்ள அறையில் எம் இருக்கிறாரா என்று 007 பார்த்த போது பின்னால்—
ஜேம்ஸ்! அங்கேயே நில்லும்! அசைந்தால் சுடுவேன்!
ஜேம்ஸ்! எந்த தந்திரம் செய்தாலும் சுடுவேன்!
ஜேம்ஸ் பாண்டை காரில் பின் தொடர்ந்த ஆள் அப்போது எம்மின் வீட்டுக்குள் நுழைந்தான். இவன் வாக்கி-டாக்கி மூலம் கட்டளை கொடுத்தவன்!
படிகளில் ஏறி ஜேம்ஸ் பாண்டை குறி வை!
ஜேம்ஸ்! மேலே ஏறும்! உமக்கு காட்ட வேண்டிய காட்சி ஒன்று இருக்கு!

ஜேம்ஸ்! ஏதாவது செய்தால் சுடுவேன்
உள்ளே போ
உள்ளே போய் பார்த்த ஜேம்ஸ் பாண்ட் திடுக்கிட்டார்.
அங்கே உளவுத்துறை தலைவர் மிஸ்டர் எம் ஒரு சோபாவில் பிணம்போல் சாய்ந்து கிடந்தார்.
எம் சார்!
ஜேம்ஸ்! கவலைப்படாதீங்க. அவருக்கு மயக்க ஊசி போட்டு இருக்கிறோம்.

ஜேம்ஸ்! மயக்க மருந்து ஊசி உமக்கும் போடப் — படும். நீர் எதிர்த்தால் முட்டில் சுடப் — படுவீர்!
ஜேம்ஸ்.. எந்த எதிர்ப்பும் காட்டாமல் 'கோட்'' கையை மேலே தூக்கிவிடும்!
ஐந்து வினாடிகள் தருகிறேன். அதற்குள் சம்மதிக்கா— விட்டால்
ஒன்.. டூ...
என்னை எந்த சேதாரமும் இல்லாமல், மயக்கமா பிடிக்க விரும்பறாங்க!
அவகாசம் கொடுக்கப்பட்ட 5 வினாடியும் முடிந்து விட்டது. அதன் பிறகு முட்டியில் சுடுவோம் என்ற பயமுறுத்தலுக்கு பதிலாக-
பிடி — யுங்க!

007 ஊகித்தது சரியே! அவ—ரையும் "எம்' மையும் காயம் இல்லாமல் பிடிக்க விரும்—புகிறார்கள். பிடியை தட்—டிக் கொண்டு ஜேம்ஸ் ஓட எத்தனித்தார்.
அப்போது, கையில் துப்பாக்கியுடன் இருந்—தவனும் சேர்ந்து பிடிக்க முனைந்தான். ஒரு போராட்டம் நடந்தது.
அப்போது ஒருவன் பிடறியில் கையை வைத்து அழுத்—தினான்.
உம் சீக்கிரம் ஊசி போடு!

போராட்டத்தில் ஜேம்ஸ் கீழே விழுந்தார். டாக்டர் அவசரம் அவசரமாக முன் கையில் போதை மயக்க மருந்து ஊசியை போட்டார். ஜேம்ஸ் திமிறினார்.
ஜேம்ஸ்பாண்டை எழ விடாமல் தடுத்தனர். போதை மருந்து வேலை செய்யுமுன் 007 தப்ப முனைந்தார்.
ஜேம்ஸ் பூட்ஸ் காலால் ஓங்கி உதைத்ததில், ஒருவன் மூக்கு உடைந்தது.
007 எழுந்து கொண்டார்.

மயக்க மருந்து வேலை செய்யுமுன்தப்பி ஓடினார்.
போதையில் மிஸ்டர் எம், எதுவும் செய்ய முடியா — மல் மயங்கிக் கிடந்தார். பாதி திறந்த ஜன்னல் வழி — யாக ஜேம்ஸ் தப்பிப் — பதை பார்த்தார்.
பால்கனிக்கு பறந்து வந்து மாடியில் இருந்து குதித்தார்.
போதை மயக்க மருந்து வேலை செய்வதை உணர்ந்தார்.

போதை மயக்கம் தலைக்கு ஏறியது. மன உறுதி, துணையுடன் எழுந்தார்.
தலைவரை விடுவிக்க ஏற்பாடு செய்யணும்! ஓடு! ஓடு!
ஜேம்சிடம் உதைபட்டு மூக்கு உடைந்தவன் பின் தொடர்ந்தான்.
''எம்''மை டாக்டர் பாதுகாப்பில் விட்டு விட்டு, மூவரும் ஜேம்சை தேடினர்.
இந்த வழியாகத்-தான் ஓடினான்.
குவாந்த்! அடுத்து என்ன செய்யணும்? சொல்லுங்க!

போதை மயக்க மருந்துக்கு முழுவதும் ஆட்பட்ட ஜேம்ஸ், நீண்ட புல்களுக்கு நடுவே விழுந்து கிடந்தார்.
தேடி வந்த மூவரும் அவர் அருகே வந்தனர். ஆனால் பார்க்கவில்லை.
சரி! இனியும் நேரத்தை வீணாக்க வேண்டாம்!
குவாந்த்! இதில் என் தப்பு ஒன்றும் இல்லை!
குவாந்த்! டாயல் சொன்னதை கேட்டீரா?

டாயல் உள்ளே போ!
என்னை மட்டும் குறை கூறி என்ன செய்ய?
உனது உடைந்த மூக்கு நம் திட்டத்தையே கெடுத்து விடும்
சீக்கிரமா அடுத்த காரையும் கொண்டு வா!
என்ன நடந்தது?
அதை பற்றி கவலைப்-படாதீங்க. இவரை கீழே கொண்டு போக எனக்கு உதவுங்க!
சிறிது நேரம் கழித்து-

கொஞ்சம் மயக்கம் தெளிந்த ஜேம்ஸ் எழுந்தார். தள்ளாடி நடந்தார். ரோட்டில் ஒரு கார் கிரிச்சிட்டு நின்றது.
ஏய்! முட்டாளே! சாகத் துணிந்து விட்டாயா?
ஏய்! என்ன... குடித்து இருக்கிறாயா?
என் காரில் ஒரு ஆளை கொண்டு வந்து இருக்கிறேன்.
மயக்கமா இருக்கிறார்.
வாலஸ்! மது வாடை இல்லை. எனவேகுடிக்க வில்லை!
மயக்கத்துக்கு காரணத்தை கண்டு பிடிப்போம்!
பெயர் ஜேம்ஸ்பாண்ட். போன் நம்பரும் இருக்கு. போன் செய்கிறேன்.

லண்டன் உளவுத்துறை ஆபீசில் மிஸ்டர் வில்லியம் இருந்தார்.
வில்லியம் சார்! ஜேம்ஸுக்கு ஏதோ நடந்து இருக்கு! வின்ட்சார் பார்க் அருகே பார்த்து இருக்கிறார்கள். போலீசார் பேசுகிறார்கள்!
சார்! ஜேம்ஸுக்கு எந்தக் காயமும் இல்லை. ஆனால், அவர் பேச—வில்லை. எந்த விவரமும் தெரிய முடிய—வில்லை!
ஓகே! நான் உடனே புறப்பட்டு வருகிறேன்!
டாக்டர் வந்து பார்த்தார்.
ஏதோ போதை மருந்து கொடுக்கப்பட்டு உள்ளது! மாற்று மருந்து கொடுக்கிறேன்.
மிஸ்டர் ஜேம்ஸ்! சரியாகி விட்டதா? நீங்க போலீஸ் நிலையத்—தில் இருக்—கிங்க. நான் டாக்டர்.

உடனடியா ஒரு காரும் 4 ஆயுத போல்சாரும் வேண்டும்!
சரியா நினைவு திரும்ப வில்லை
இன்னும் கொஞ்ச நேரத்தில் எல்லாம் சரியாகி, தெளிவு பிறந்து விடும்!
ஜேம்ஸ்! விவரமா சொல்லுங்க!
அட்மிரல் சர் மைல்ஸ் கடத்தப்பட்டு இருக்க வேண்டும்!
சில வினாடி கழித்து—
மைல்ஸ் வீட்டில் பதில் இல்லை!
போனை என்னிடம் கொடுங்க!
ஜேம்ஸ்பாண்ட், உடனடியா விமான நிலைய பாதுகாப்பு அதிகாரியும், தன் நண்பரு—மான ஸ்பென்சுக்கு தகவல் கொடுத்தார். கொஞ்ச நேரத்—தில் அந்த போலீஸ் நிலை—யத்துக்கு வில்லியம் வந்தார்.
அந்த அறை சார்.

பிறகு அங்கே ஒரு போலீஸ் அதிகாரி வந்து—
சார்! பயங்கரம் நடந்து இருக்கு. உடனடியா மிஸ்டர் எம் வீட்டுக்கு போவோம்!
எம் வீட்டுக்கு வில்லியம், ஜேம்ஸ்பாண்ட் மற்றும் போலீசார் விரைந்தார்கள்.
இவன் அந்த கூட்டத்தைச் சேர்ந்த கைக்கூலி!
சமையல் அறையில் மிஸ்டர் எம்மின் உதவியாளரும் அவர் மனைவியும் கிடந்தனர்.
கதவைத் திறந்ததும் ஹாமண்ட் சுடப்பட்டு இருக்கிறார். பிறகு அவர் மனைவியை கொன்று இருக்கி—றார்கள்!
தேவையே இல்லாமல் பச்ச ரத்தப் படுகொலை! இந்த அரக்கத்தனத்துக்கு சிலர் பலியாவது உறுதி!

ஜேம்சிடம் வில்லியம்—
எதிரி ஒருவன் சாகக்—காரணம் என்ன?
அவனது உடைந்து மூக்கு மற்றவர் கவனத்தை கவரும் என்று நினைத்து இருக்கலாம்.
தலைவர் எம்மை, விமானம் மூலம் அவர்கள் கடத்த திட்டம் போட்டிருக்க வேண்டும்.
எதிராளியின் பிணத்தை தங்களுடன் தூக்கிப்-போகாததற்கு வேறு ஏதோ காரணம் இருக்க வேண்டும்?
உஷார்படுத்தப்பட்ட விமான நிலையங்க-ளில் இருந்து தகவல் வராதா என்று இரு-வரும் காத்து இருந்தனர்.
இன்னும் எந்தத் தகவலும் இல் — லையே!
இந்நேரம் மிஸ்டர் எம், விமானத்தில் எங்கோ கொண்டு செல்-லப்பட்டு இருப்பார்.
கடல் வழியாக போய் இருந்தால்...!
அப்படியும் இருக்கலாம். அவர்களுக்கு பாதுகாப்பான இடம் எதுவா இருக்கும்.
டிரிங்... டிரிங்...

சார்! எயர் லிங்கஸ் 147 விமானத்தில், வயதான, நடக்க முடியாத ஒருவரை கொண்டு போய் இருக்காங்க!
அவர்கள் 9-30 மணிக்கு ஷானன் என்ற இடத்தில் இறங்கி இருக்- -கிறார்கள். பிறகு கடற்- -கரைக்கு போய் இருப்- -பார்கள்.
அந்த இடம் மேற்கு ஐரோப்பாவின் கடற்கரைப்- -பகுதி.
அங்கிருந்து எந்திரப் படகு, மூலம் கொண்டு போய் இருக்கலாம்.
இனியும் இப்படியே இருப்பதால் பலன் இல்லை!
இதில், இறந்த எதிராளியின் போட்- -டோ, கைரேகை, பையில் இருந்தவை எல்லாம் இருக்- -கின்றன.
முக்கியமா எதுவும் இருக்கிறதா?
ஒரு விஷயம் முக்கியமா தெரியுது!

இந்தச்—
சீட்டு, அவன்
மணிபர்சில்
இருந்தது!
கிறிஸ்டியானா 68-417
பாரீஸ் 73-520
வாஸ்சோ 44-932
அன்டிகோனே 68-599
இவைபோன் நம்பர்களா?
அல்லது பின்கோடு நம்பர்களா?
இன்ஸ்பெக்டர் இன்று இரவு
முக்கிய கூட்டம் ஒன்று
நடக்கும். அதில் கலந்து கொள்ள
தயாரா இருங்க!
அன்று நள்ளிரவு அந்த முக்கிய கூட்டம் நடந்தது. பாதுகாப்பு மந்திரி சர் ரெனால்டு கலந்து கொண்டார். மிஸ்டர் எம் கடத்தப்பட்டது பற்றி அவரிடம் சொல்லப்பட்டது. அவர் கூறினார்
பிரதமர் வாஷிங்டனில் இருப்பதால் நாம்தான் முடிவு எடுக்க வேண்டும்!
இதுபற்றி பிரதமரிடம் உடனடியா கூற வேண்டும். பட்டப்பகலில், லண்டனில், உளவுத்துறைத தலைவர் கடத்தப்பட்டு இருக்கிறார் என்றால் அது சாதாரண விஷயமா?

சரி...! கொல்லப்பட்ட எதிராளி பற்றி ஏதாவது தகவல் உள்ளதா?
இல்லை! சர்வதேச போலீசிடம் கேட்டுப் பார்க்—கலாம்!
ஆனால் அதில் நம்பிக்கை இல்லை!
கொல்லப்பட்ட எதிராளியை வைத்து கூட்டத்தை பிடிக்க முடியும் என்றால், அவனை கடத்தல்காரர்கள் விட்டுச் சென்று இருக்க மாட்டார்கள்!
சரி...! "எம்"மை கடத்த காரணம் என்ன? இதற்கு பின்னணி யார்? கருத்து சொல்லுங்க!
ஏதாவது எதிரி நாட்டு உளவு ஸ்தாபனம் இதைச் செய்து இருக்குமா என்பது சந்தேகம். பணயப்பணத்—துக்காக கடத்தப்பட்டு இருக்கலாம்!

மிஸ்டர் எம் அளவு அந்தஸ்து உடைய எவரையும் நாம் பிடித்து வைக்கவில்லை.
“எம்'மிடம் இருந்து ரகசியங்களை பெற கடத்தினார்களா?
அதற்கு ஜேம்சையும் கடத்த வேண்டாமே!
ரகசிய தகவல்—களுக்காக மட்டும் இராது.
மிஸ்டர் வில்லியம்! எந்த ஆதாரமும் இல்லாமல் எந்த முடிவை எடுக்க முடியும்?
இறந்தவனிடம் இந்த காகிதம் இருந்தது
கிறிஸ்டியானா 68-417
பாரீஸ் 73-520
வாஸ்சோ 44-932
அன்டிகோனே 68-599
இதுபற்றி நிபுணர்கள் கருத்து என்ன?
தொடர்ந்து பரிசீலனை செய்யறாங்க! 2 அனுமானம் இருக்கு!

அதில் உள்ள எண்கள் போன் நம்பராக இருக்கலாம்!
போன் நம்பர் என்றால் எந்த இடம்?
கிறிஸ்டியானா நார்வேயில் உள்ள கிறிஸ்தியானியா; வாஸ்சோ என்பது பிரான்சில் உள்ள வாஸியாக இருக்கலாம். பாரீஸ் என்பது தெரிந்ததே!
அந்த எண்கள் அங்குள்ள டெலிபோன் எண்களா என்பதை 10 நிமிடத்தில் தெரிந்து கொள்ளலாம்!
அடுத்த அனுமானம் அந்த எண்கள் வரைபடத்தில் காணப்படும் அட்சரேகை, தீர்க்க ரேகையாக இருக்கலாம்!
கடைசி பெயர், "அன்டிகோனே!" என்பது எதைக் குறிக்கிறது?

கிரேக்க நாடகம் சோபாக்கிள்ஸ். இல்லையா?
அதற்கும் இதற்கும் என்ன தொடர்பு!
அது, பெண்களுக்கு இடப்படும் பெயர் ஆகும்!
கொஞ்சம் இருங்க!
கிறிஸ்டியானா என்பது கிறிஸ்டினே என்ற கிரேக்க பெண்ணின் மரூஉ பெயராக இருக்கலாம்! பாரிஸ் என்பது அந்த நாடகத்தில் ஒரு ஆணின் பெயர்!
வாஸ்சோ பற்றி சரியா அனு மானிக்க முடிய வில்லை!
கிரேக்க நாட்டு தூதரகத்தில் உள்ள மேரியுடன் இணைப்பு கொடு!
போன் பேசிவிட்டு திரும்பிய வில்லியம்—
வெரிகுட்! நெருங்கி விட்டோம்!
அந்த 4 பெயர்களும் கிரேக்க பெயர்களாக இருக்க வேண்டும் என்றும்; அந்த எண்கள் ஏதென்ஸ் அல்லது சலோனிகாவின் போன் நம்பர்களாக இருக்க வேண்டும் என்றும் சொல்கிறார்கள்!
கடத்தல் காரர்கள் இறந்தவனையும் அவன் உடைமை களையும் எடுத்துப் போகாத தால்தான் துப்பு கிடைத்தது!

அவசரமாக போய் விட்டனரா?
இல்லை, சர் ரொனால்ட் அவர்களே! நம் பார்வையை கிரேக்கத்தை நோக்கி திருப்ப வேண்டும் என்றே அதைச் செய்து உள்ளனர்!
ஜேம்ஸ் சொல்வது சரிதான். அவர்கள் வேண்டும் என்றே அந்தச்- -சீட்டையும் விட்டுச்- -சென்று உள்ளனர்.
அவர்கள் நோக்கம் என்ன?
கடத்தலில் என்னையும் சேர்க்க இருந்தார்கள். இப்போதும் அதை செய்யவிரும்புகிறார்கள்! அதற்கு இது பொறி!
“எம்”மைத் தேடி நான் கிரீஸ் நாட்டுக்கு போக வேண்டும்; அங்கே என்னை பிடிக்க வேண்டும்.இது அவர்கள் திட்டம்!

மறுநாள் காலை—
ஜேம்ஸ்! கிரீஸ் நாட்டில் உள்ள நமது உளவு நிலையத்துக்கு தகவல் கொடுப்போம். நீ வருவதாகச் சொல்வோம்!
கிரீஸ் நாட்டில் எந்த இடத்தில் இருந்து ஆரம்பிக்கலாம்?
ஏதென்ஸ் நகர் போகிறேன்.
அவர்களே என்னைத் தேடி வருவார்கள்!
கிரீஸ் நாட்டில் உள்ள ஏதென்ஸ் நகரில் ஒரு புத்தகக் கடையின் பின்புறம், இங்கிலாந்து உளவுத்துறை கிளை நிலையம் இருந்தது. அதற்கு, எம் கடத்தப்பட்டது பற்றி தகவல் கொடுக்கப்பட்டது. பிறகு—
பிஇஏ 517 எண் விமானத்தில் 007 ஏதென்ஸ் வருகிறார். கடத்தல்காரர்கள் பார்வையில் படுவதே அவர் வருகையின் நோக்கம்.

ஜேம்ஸ் போகும் இடத்தை ரேடியோ கருவி மூலம் கண்காணி.. அதன்மூலம் கடத்தல்காரர்கள் இருக்கும் இடத்தை கண்டுபிடி!
உளவுத்துறையில் முன்னாள் "00" அந்தஸ்து ஏஜெண்டான தாமஸ் ஏதென்ஸ் நகரத்தில் பொறுப்பு ஏற்று இருந்தார்.
007-ஐ இரையாக வைத்து கடத்தல் மீன்களை பிடிக்க வேண்டும்!
ஏதென்ஸ் நகர கிளைக்கு தொடர்ந்து தகவல் வந்து கொண்டு இருந்தது.
ஜேம்ஸ் போகும் இடத்தில் இருந்து உங்களுக்கு தகவல் வர என்ன செய்வீர்கள்?
தாமஸ் சொல்கிறார், ஒரு மினி சமிக்ஞை கருவி ஜேம்ஸ் பாண்ட்க்கு கொடுக்கப்படுமாம்!
அதே நேரத்தில், ஐரீஸ் நாட்டு கடற்கரையில் இருந்து புறப்பட்ட ஒரு விமானம், அது இறங்க வேண்டிய இடத்தை நெருங்கியது.
சவுன்னியான் முனை அருகே இறங்கு!
கடலில், இயந்திரப் படகு போல் மிதக்கக்கூடிய அந்த விமானம், விடியும் வேளையில் கிரீஸ் நாட்டில் உள்ள சவுன்னியான் முனை அருகே கடலில் இறங்கியது.

ஜேம்ஸ்பாண்ட் ஏதென்ஸ் வராவிட்டால் என்ன செய்வது?
இங்கே உள்ள இங்கிலாந்து உளவாளி ஒருவரை பிடித்துக் கொள்ளலாம்.
மிஸ்டர் குவாந்த்! ஒரு ஆளைத்தான் கொண்டு வந்து உள்ளோம்! கர்னல் சன் என்ன சொல்வாரோ?
சிறிது நேரத்தில் அந்த விமானம் மீண்டும் உயரே பறந்து, பிறகு, சைகிளேட்ஸ் தீவுகள் அருகே கடலில் இறங்கியது.
அட்மிரல்! இந்தப் படி வழியாக மெல்ல இறங்குங்கள்!
மயக்கம் தெளிய இன்னும் வெகுநேரம் ஆகும்!
இவரை யார் பார்த்தாலும், ஏதோ நரம்பு தளர்ச்சி நோயால் பாதிக்கப்பட்டவர் என்றுதான் நினைப்பார்கள். மற்றபடி வேறு விதமா சந்தேகப்--படமாட்டார்கள்.


பிறகு அந்த மோட்டார் படகு மிஸ்டர் எம், மற்றும் கடத்தல் காரர்களுடன் அங்கு இருந்து புறப்பட்டு விர-கோனசி என்ற சிறிய கிரேக்கத் தீவுக்கு வந்து சேர்ந்தது.
குன்றின் உச்சியில் இருந்து 2 பேர் அதை பைனா-குலர் மூலம் கவனித்தார்கள்.
தோழர் கர்னல் சன்! படகு வந்து விட்டது. இருட்டும் வரை நம் "விருந்தினர்" அங்கேயே இருக்க வேண்டுமா?
இல்லை. உடனடியாக இங்கே கொண்டு வந்து விட வேண்டியதே. நமது மற்ற தோழர்கள் சீக்கிரம்வர வேண்டும்!
மிஸ்டர் எம், கடத்தல்கார-ர்களால் கைத்தாங்கலாக கரை ஏற்றப்-பட்டார். விவ-ரம் தெரி-யாத ஒரு பெண்—
இந்த ஆள் ஏகமாக குடித்து விட்டாரா?
சீக்கிரம் மேலே கொண்டு போங்க! கர்னல் காத்து இருக்-கிறார்!

குன்றின் உச்சியில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த அந்த 2 வெளிநாட்டுப் பயணிகள் தொடர்ந்து கவனித்தார்கள்.
அது ஒன்றும் இல்லை, போரீஸ்! ஒரு குடி வெறியரை கரை ஏற்றுகிறார்கள்!
தோழர் கர்னல் அவர்களே! இரண்டாவது நபரை பிடிக்க முடியவில்லை.
ஓ! ஒரு விருந்தாளிதான் அகப்பட்டாரா? நான் ஆவலோடு எதிர்பார்க்கும் அடுத்த விருந்தாளி என்ன ஆனார்?
அந்த ஆளை பிடித்தோம். ஆனால் ரொம்ப திமிறி ரகளை செய்து விட்டார். அதனால் மயக்க ஊசியை சரியான முறையில் போட முடிய—வில்லை!
எனக்கு சாக்கு போக்கு வேண்டாம். ஜேம்ஸ்—பாண்ட் எங்கே?


ஜேம்ஸ் தப்பி விட்டார். அவர் லண்டனில்--தான் இருக்--கிறார்.
சண்டையில் டாயலின் மூக்கு உடைந்து விட்டது. அது நம்மைக் காட்டிக்-கொடுத்து விடுமோ என்று அவனை அங்கேயே தீர்த்து விட்டோம்!
தப்பி விட்ட ஜேம்சை பிடிக்க குவாந்த் ஒரு நல்ல முன் ஏற்பாடு செய்து உள்ளார். அதன்படி சீக்கிரம் ஜேம்ஸ் நம்மிடம் சிக்குவார்.
அதைச் செய்ய என்ன செய்து உள்ளீர்கள்?
டாயலின் உடலில் ஒரு துப்பை வைத்துவிட்டு வந்து உள்ளோம்.
ஜேம்ஸ் நிச்சயம் கிரீஸ் வருவார். அவரை பிடிக்க குவாந்தை, சவுனியன் முனையில் இறக்கி விட்டோம்!
இந்நேரம் ஏதென்சில் உள்ள நமது நண்பர்களை குவாந்த் தொடர்பு கொண்டு இருப்பார்.
ஜேம்ஸ் சிக்கவில்லை என்றால்...?

இன்னொரு இங்கிலாந்து உளவாளியை பிடிக்க வேண்டியதுதான். மிஸ்டர் எம், இருப்பதால் நமது திட்டம் வெற்றி பெறும்!
டி கிராப்! இயன்றவரை என்ன செய்ய முடியுமோ அதை செய்து இருக்கிறீர்கள்!
ஏதென்சில் இருந்து என்ன தகவல் வருகிறது என்று பார்ப்போம். டோனியும், லூசியாவும் உங்கள். களைப்பை போக்கு வார்கள்!
நமது கவுரவ விருந்தாளியை கவனிக்கிறேன்!
குட் மார்னிங் அட்மிரல் மைல்ஸ் அவர்களே! என் பெயர் கர்னல் சன்-லியாங்-தன்! மக்கள் விடுதலைப் – –படையைச்– சேர்ந்தவன்! எப்படி இருக்கிறீர்கள்?
மஞ்சள் முக கொள்ளைக்காரா! நீ கேட்கும் எந்தக் கேள்விக்கும் பதில் என்னிடம் இருந்து வராது!

வெள்ளை முக வெறி நாயே! கேள்வி கேட்க உன்னை இங்கே கொண்டு வரவில்லை.
ஆனால் கேள்வி கேட்க நேரம் வரும் போது, நீ பதில் சொல்லியே ஆக வேண்டும்!
டாக்டர் லோக்மேன்! இந்த ஆளை இங்கே இருந்து அப்புறப்படுத்தி தொடர்ந்து மயக்க நிலையில் வையுங்க!
மறுநாள் ஜேம்ஸ் ஏதென்ஸ் வந்தார்.
ஓட்டல் கிராண்ட் பிரதிக்னேயில் 007–
மிஸ்டர் பாண்ட்! உங்க நண்பர்கள் இந்த பார்சலை உங்களிடம் கொடுக்கும்படி சொன்னர்கள்!
ஓட்டலில் இருந்த போது, கால் ஷூவில், தகவல் நுண் கருவியை பொருத்தினார்.

நானும் கடத்தப்பட வேண்டும். அதற்கு வழி செய்யணும் தாமஸ்சின்
ஆட்கள் என் பிளிப் ஒலியை கேட்டு பின் தொடரணும்!
பிறகு ஜேம்ஸ்பாண்ட், ஓட்டலில் மதுபான பிரிவுக்கு வந்தார்.
இனி இங்கே உட்கார்ந்து பார்க்கிறேன்!
இரவு 10 மணிவரை அந்த பாரில் ஜேம்ஸ் இருந்தார். அவர் எதிர்பார்த்தபடி அவரை யாரும்கடத்தவில்லை.
நன்றி சார்!
பிறகு அவர் புறப்பட்டார்.
திடீர் என்று—
ஆ! ஐயோ
இது எதிரி என்னை இழுக்கச் செய்யும் தந்திரமாக இருக்குமோ!
பிளீஸ்! காப்பாற்றுங்க! உதவி!
ஜேம்ஸ் அந்தப் பெண் அருகே போனார்.
சார்! இந்த ஆள் என்னிடம் ஆபாசமா பேசி வம்பு செய்கிறார். உதவி செய்யுங்க!

மிஸ்டர் அந்தப் பெண் சொல்றது உன் காதில் விழ வில்லையா?
நன்றி சார்! ஏதாவது அசிங்கமா நடந்து விடுமோ என்று பயந்தேன்.
அந்த ஆள் யார்?
ஒரு மேஜையில் அமர்ந்தனர்.
அந்த ஆள் பெயர் ஷிமாஸ்! ரத்தன கம்பளம் விற்கும் பணக்கார வியாபாரி.
நல்ல வேளை நீங்கள் வந்தீர்கள். என் பெயர் அரியட்னே!
என் பெயர் பாண்ட்! ஜேம்ஸ்பாண்ட்!
எனக்கு ஆங்கிலம் தெரியும் என்பதை எப்படி தெரிந்து கொண்டாய்!
நீங்கள் வெள்ளைக் காரர் மாதிரி இருந்தீர்கள்.
நீங்க ஏதென்சுக்கு என்ன வேலையா வந்து இருக்- -கிறீர்கள்?

சுற்றிப்-பார்க்க!
அப்படி என்றால், நான் உங்கள் வழி காட்டியா இருந்து, உதவி செய்வேன்!
உங்களுக்கு கிரேக்க உணவு பிடிக்குமா? எனக்கு ஒரு நல்ல ஓட்டல் தெரியும்!
அரியட்னே! உனக்கு விருப்பமான இடத்துக்கு கூட்டிச்செல்!
இருவரும் சாப்பிட ஒரு ஓட்டலுக்கு சென்றனர்.
அரியட்னே! என்னை அங்கே கூட்டிப்போ!
மிஸ்டர் ஜேம்ஸ்! மணி 11-30 ஆகிவிட்டது. இன்று பவுர்ணமி நிலவு. அதன் ஒளியில் பழங்கால கோட்டை பார்க்க அழகா இருக்கும்!
பிறகு-
அதோ, அவர்கள்!

கடத்தல்காரர்கள் கண்ணில் எப்படியாவது பட வேண்டும் என்ற எண்ணத்தில் அரியட்னேயுடன் அந்தரங்க நட்பு உள்ளவர் போல் ஜேம்ஸ் நடித்தார்.
அதற்கு அவள் இணங்கியதால் அவள் எதிரியின் ஆள் என்பதை 007 கண்டு கொண்டார்.
அப்போது பின்னால் வந்த 2பேரை பார்த்த அவள்—
கண்களில் பயம் துள்ளியது. அவர்-களிடம் கிரேக்க மொழியில் பேசினாள்.
லிக்கிஸ் இனே எஸ் ஏலின் அபொஸ்-டோலின்—
கல கதலவா!
அடுத்த நிமிடம், தந்திரம் செய்து 007-ஐ அவள் அடித்தாள்!
ஒரு கிரேக்கப் பெண்ணிடம் இப்படி நடக்க என்ன துணிச்-சல்?
வெள்ளை பன்றி!
அடுத்த வினாடியே ஜேம்ஸ் காதில் அவள் கிசுகிசுத்தாள்!
ஜேம்ஸ்! இவர்கள் எதிரிகள்! இங்கு இருந்து போவோம்!

பிறகு, ஜேம்ஸ் சிறிதும் எதிர்–பாராத வகையில் ஒரு எதிரியை அவள் தாக்கினாள்.
அடுத்த ஆளை 007 தாக்க–
ஜேம்ஸ்! சீக்கிரம் ஓடி வாங்க!
ஏய்! அரியட்னே! என்ன நடக்கிறது என்று எனக்குப்– –புரிய வில்லை!
அதைச் சொல்ல நேரம் இல்லை. முதலில் நம்மை காத்துக் கொள்ள வேண்டும்!
ஜேம்ஸ்! அந்த வழியாகப்போக வேண்டாம்! தப்பிக்க வேறு வழி இருக்கு! வாங்க!

ஜேம்ஸ்! இதன் வழியாக இறங்கினால் பாதுகாப்பா தப்பிக்க முடியும். வாங்க!
மேலே ஒரு உருவம் தெரியுது! கீழே குதி!
கீழே குதித்து இருவரும் ஓடியபோது—
அங்கே அருகில், திறந்தவெளி மேடையில், நாடகம் முடிந்து திரும்பிக் கொண்டிருந்த கூட்டத்தில் இருவரும் கலந்தனர்.
நன்றி! அரியட்னே! உனக்கு இங்கே எல்லா இடமும் தெரிவதால், எளிதில் தப்பி—னோம்!
ஜேம்ஸ்! இரவு காட்சி முடிந்து ஆட்கள் போகிறார்கள்! அவர்களுடன் கலந்து விடு—வோம்!

எனக்கு இந்த பழங்கால கோட்டை முழுவதும் அத்துப்படி! இனி நாம் சரியாக திட்டம் போட்டு...
வேண்டாம். நீ யார் என்று எனக்கு தெரிய வேண்டும்!
ஜேம்சை தன் பொறியில் வேறு வகை-யில் சிக்க வைக்க நினைத்து அவரை தப்ப வைத்து விட்டாள் அரியட்னே!
ஜேம்ஸ்! அதுபற்றி பிறகு பேசுவோம். நாம் இன்னும் ஆபத்தை தாண்டவில்லை. முதலில் ஒரு டாக்சியில் ஏறுவோம்!
நாங்கள்தான் இந்த டாக்சியை முதலில் பிடித்தோம்.
ஜேம்ஸ்! இனி ஆபத்து இல்லை!
சரி, என்னை விடு! நான் உன்னிடம் சில கேள்வி-களை கேட்க வேண்டும்!
ஜேம்ஸ்! உங்களை அடித்ததற்கும், திட்டியதற்கும் மன்னிப்பு கேட்கிறேன்!
அதை விடு! என்னை 2 பேர் கடத்துவதற்காக அந்தக் கோட்-டைக்கு கூட்டி சென்றாய் இல்லையா?

ஆனால் அவர்கள் வந்ததும் ஏன் திடீர் என்று மாறி—னாய்?
லிக்கிஸ் ஏன் வரவில்லை என்றுகேட்டேன். அவர்கள் அவர் வேறு வேலைக்கு அனுப்பப்பட்டதாக சொன்னார்கள்!
உண்மையில் அந்தப் பெயரில் எங்களிடம் யாரும் இல்லை. அதனால் அவர்கள் எதிரிகள் என்று யூகித்தேன்.
சரி! என்னைக்—கடத்த வந்த அந்த ரெண்டு பேரும் உன் ஆட்கள் இல்லை என்றால், அவர்கள் யார்?
ஜேம்ஸ்! அதை என்னால் சொல்ல முடியவில்லை. எனக்கு ஒரே குழப்பமா இருக்கு. நாங்கள் தேடும் ஆள் நீங்கள் இல்லை என நினைக்கிறேன்.
சரி, இப்போ எங்கே போகிறோம்!
எனது தலைமை அதிகாரியிடம். அவர் உங்களிடம் நேரடியாக பேசுவார். என்னை நீங்க நம்பலாம்!
நான் உன்னுடன் வந்து, என்ன நடக்கிறது என அறிய விரும்புகிறேன்!

ஜேம்ஸ்!
என் தவறால் உங்களுக்கு ஏதாவது துன்பம் ஏற்படக்கூடாது!
பிறகு அவர்கள் இருந்த வாடகைக் கார், ஒரு வீட்டுக்குள் நுழைந்தது.
வீட்டுக் கதவை ஒருவித தாள ஒலியில் அரியட்னே தட்டினாள்.
ஷிமாங்! நான் அரியட்னே! சீக்கிரம் உள்ளே போவோம்!
ஜேம்ஸ், நாம் மீண்டும் சந்திக்கிறோம்!
பாண்ட்! நீரே விரும்பியா இங்கே வந்து இருக்கிறீர்?

பிறகு அங்கு இருந்தவர்கள் கிரேக்க மொழியில் தங்களுக்குள் பேசிக் கொண்டனர். பிறகு ரஷிய உச்சரிப்புடன் பேசினர்—
ஜேம்ஸ்! உமது கைத்— —துப்பாக்கியை கொடுங்க!
என் பெயர் கார்டியன்கோ. அதோ போன் பேசுவது என் நண்பன் மார்கோஸ். இவர் ஷிமாங்! ஜேம்ஸ் என்ன சாப்பிடு— —கிறீர்கள்?
மிஸ்டர் ஜேம்ஸ்! இப்போ சொல்லுங்க. நீங்க ஏன் கிரீஸ் நாட்டுக்கு வந்தீங்க?
அரியட்னேயின் ரஷிய தலைமை அதிகாரி, ஜேம்ஸ்பாண்டை விசாரித்தார்.
ஏன் வந்தேனா? நான் இங்கே வரவேண்டும் என்பதற்காக, லண்டனில் ஒரு துப்பை வைத்தீர்கள். அதன்படி வந்து இருக்கிறேன்! ஆமா, ஏற்கனவே கடத்தப்— —பட்டவர் எங்கே?

ஏற்கனவே கடத்தப்பட்டவரா? யார் அது? உங்களை கடத்த முயன்றது யார்?
அப்படி என்றால் வேறு கோஷ்டி ஈடுபட்டு இருக்கு. சில கேள்விகளை கேட்கலாமா?
ஏற்கனவே கடத்தப்பட்டவர் பற்றி உங்களுக்குத் தெரியாது என்றால், என்னிடம் உங்களுக்கு என்ன வேலை?
இங்கிலாந்து ராணுவ உளவாளியான நீங்கள் இங்கே வருவதாக எங்களுக்கு தகவல் கிடைத்தது. அதனால் உங்களை பிடித்துவர உத்தரவு போட்டேன்!
உங்களை பிடித்து 3 நாள் வைத்துக் கொண்டு விசாரிக்க வேண்டும் என்பது, எனக்கு என் மேல் அதிகாரியின் உத்தரவு.
எதிரும் புதிருமாக இருக்கும் நாம் மூன்றாவது ஒரு கோஷ்டி இருப்பதை மறந்து விடுகிறோம்!
நம் இரு தரப்புக்கும் எதிரே ஒரு சக்தி வேலை செய்யுது. அதை கண்டுபிடிக்க மட்டுமாவது நாம் ஒன்று சேர்ந்தால் என்ன?
சரி! சில, உண்மைகளைக் கூறுகிறேன். இங்கே ஒரு முக்கிய மான ஒப்பந்தத்தில் ஈடுபட உள்ளோம். அது ராணுவ சம்பந்தம் இல்லாதது.

என்றாலும், உங்களது திடீர் வருகை அந்த ஒப்பந்தம் ஏற்படுவதை பாதிக்குமோ என்று பயந்து 3 நாள் பிடித்து வைக்க நினைத்தோம்.
சார்! முக்கியமான செய்தி!
ஜேம்ஸ்! உங்களை பிடித்து வர இரண்டு பேரை நியமித்து இருந்தோம். அவர்களை எதிரிகள் கொன்று விட்டதாக இப்போ செய்தி கிடைத்து இருக்கு!
ஒரு நடுநிலை நாட்டில், 2 ஏஜெண்டுகளை கொல்வது என்பது மிக ஆபத்தான அறிகுறி. நாம் மிகுந்த ஆபத்தில் இருக்கிறோம்.
அந்த ஒப்பந்தம் ஏற்படுவதைத் தடுக்க எதிரிகள் இப்படி சதி செய்கிறார்களோ என சந்தேகம் கொள்கிறேன்.
அந்த மூன்றாவது கோஷ்டியை உடனடியா கண்டுபிடிக்க வேண்டும்.
சார்! உங்கள் ஆபீசில் யாரோ துரோகி இருக்கலாம்!

அப்படி சந்தேகப்பட வேண்டும் என்றால், உங்களைப்பிடிக்கும் வேலையை ஒப்படைத்த அதிகாரியைத்தான் சந்தேகிக்க வேண்டும்!
நீங்கள் இங்கே கொண்டு வரப்-பட போகிறீர்கள் என்று அறிந்து இருக்கும் அவர் எங்களுக்கும் தீங்கு விளைவிக்க-லாம்!
எனவே உடனடியா இந்த இடத்தைவிட்டு காலி செய்துவிட்டு இன்னொரு ரகசிய இடம் போகிறோம்.
மிஸ்டர் பாண்ட்! நீங்களும் எங்களுடன் வரலாம்? அல்லது உங்கள் தலைமை அதிகாரியுடன் பேசுங்க! பிறகு முடிவைச்-சொல்லுங்க!
வெளியே கதவு திறக்கும் சத்தம் கேட்குது!
யாரோ வருகிறார்கள். எதிரிகளா?
அடுத்த சில வினாடிகளில் உள் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது.
தட்! தட்! தட்!

தட்டும் முறையால் நமது ஆள்!
ஒரு துரோகிக்கு நமது "கோடு" முறைகள் தெரிந்து என்ன செய்ய? ஷிமாங்! ஜாக்கிரதையா பார்!
கதவு சங்கிலியை பிணைத்து விட்டு ஷிமாங் ஜாக்கிரதையாக பார்த்தார். அப்போது—
விளக்கை அணை! குயிக்!

ஜன்னலை விட்டு விலகுங்க!
பின் கதவு வழியாக தப்பிப் போக முடியாது. முன் வழியாகவே தப்ப வேண்டும்!
இந்தத் தெருவின் இடதுபுறம் ஒரு சந்து இருக்கு. அதன் வழியாகப் எளிதாக தப்பித்து விடலாம்.
சரி! ஒருவர் பின் ஒருவரா போவோம்!
உம் போங்க!
அனைவரும் அந்த வீட்டைவிட்டு வெளியே வந்து, தெருவுக்கு வந்தனர். இடப்புற சிறிய தெருவை நோக்கி ஓடினர். அப்போது—

எதிர் . பக்கம் இருந்து பாயந்து வந்த குண்டு மார்கோசை தாக்கியது.
அந்த திசையை நோக்கி ஜேம்ஸ் திருப்பி சுட்டார்.
பல துப்பாக்கிகள் சடசடத்தன!
ஜேம்ஸ்! இங்கே சந்தில் ஒரு ஆள் இருக்கிறான்!
உடனே-

சந்து வழியா நுழைந்து தப்பிக்க முயலும்போது, எதிராளிகள் சுட்ட ஒரு குண்டு அரியட்னேயின் ரஷிய அதிகாரி கார்டியன்கோவைத் தாக்கியது.
எதிரிகள் தரப்பில் ஒருவன் இறந்து விட்டான்.
மேஜர் கார்டியன் கோகுக்கு காயம்! முதுகில் குண்டு புாய்ந்து விட்டது!
மற்றவன் ஓடி விட்டான். இனி சுட்டு பயன் இல்லை!
சரி! நீ இங்கேயே இரு. நான் மார்கோசை பார்த்து வருகிறேன்.
மார்கோஸ் இறந்து விட்டார். நாய்கள் குரைத்தன. பல வீடுகளில் விளக்கு எரியத் தொடங்கியது.
ரஷிய அதிகாரியைப் பார்க்க வேண்டும்.
மார்கோஸ் என்ன ஆனார்?
இறந்து விட்டார்.

உங்க-ளுக்கு அவனை தெரி-யுமா?
ஆமா. எங்கள் தலைவரை லண்டனில் கடத்திய கடத்தல் காரர்களுக்கு இவன்தான் தலைவன்!
என்ன! உங்க உளவுத்துறை தலைவர் கடத்-தப்பட்டாரா? அப்படி என்றால்...
எதிரி பயங்கர திட்டத்தில் ஈடுபட்டு உள்ளான். இதன் விளைவாக உலகப் போர் மூளலாம்!
திடீர் என்று ரஷிய உளவுத்துறை அதிகாரி மேஜர் கார்டியன் — கோவின் நிலை மோசமாகியது. அவர் காலமானார்.
ஒரு வீரத் திருமகன் இறந்து விட்டார்.
ஜேம்ஸ்! நம் இருதரப்பும் சேர்ந்து செயல்பட வேண்டும் என்பதே அவர் விருப்பம்!

சரி! நாம் உடனடியா இந்த இடத்தை விட்டு கிளம்ப வேண்டும்!
எனக்கு ஒரு சினேகிதி இருக்கிறாள் அவள் வீட்டுக்கு போவோம்!
உடனடியா இருவரும் அந்த இடத்தில் இருந்து ஓடிப்போய், பிறகு ஒரு வாடகைக்காரில் ஏறி, அரியின் சினேகிதி வீட்டை அடைந்தார்கள்.
நல்லவேளை என் சினேகிதி வீட்டில் இருக்கி--றாள்!
நீங்க தங்கி இருக்கும் ஓட்டல் மாதிரி இந்த அறை வசதியா இராது!
எதிரி கண்ணில் படாமல் இன்று இரவை கழித்து விட்டால் போதும்! மற்றதை காலையில் பார்ப்போம்!
லண்டன் உளவுத் துறையில்-
சார் வில்லியம்! கிரீஸ் நாட்டு ஆபீசில் இருந்து செய்தி! ஏதோ ஆபத்து போலிருக்கு!
கிரீஸ் நாட்டில், இங்கிலாந்து உளவுத்துறையின் ரகசிய ஆபீஸ் இருந்த புத்தகக் கடையை எதிரிகள் தாக்கினர்.
தீக்கு பயந்து ஏஜெண்ட் வெளியே வருவான் பின்புறம் நீ பார்!
லண்டன் உளவுத்துறை ஆபீசில்-
ஜேம்ஸ்ண்டை பின் தொடர்ந்த நம் ஆட்களிடம் இருந்து தகவல் எதுவும் வரவில்லை என்று தாமஸ் கூறுகிறார்.

நான் தாமசுடன் பேச வேண்டும.
சார், நீங்க பேச முடியாது. தொடர்பு அறுந்து விட்டது.
மறுநாள் கிரேக்க (கிரீஸ்) நாட்டில் உள்ள ஏதென்ஸ் நகரில் ஒரு ஓட்டலில்—
அரி! உங்கள் தரப்பில் உயிரோடு இருப்பது நீ மட்டும்தான். அதனால் நீ என் பக்கம் சேர்ந்துவிடுவதே பாதுகாப்பு!
இருதரப்பும் சோந்து செயல்பட வேண்டும்என்பதே கார்டியன்கோவின் கடைசி ஆசை. ஆனால்
ரஷிய தூத—ரகத்துக்கு விஷயத்தை சொல்லி விடுவோம். அதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன்.
உடனே 007, ஏதென்சில் உள்ள உளவு ஆபீசுக்கு போன் செய்தார்.
என்ன! போன் கிடைக்க வில்லையா?
திரும்பி வந்த ஜேம்ஸ்சிடம் அரி—
உங்க ஆபீசுடன் பேச முடிய வில்லையா?
போனே கிடைக்கவில்லை என்று ஆபரேட்டர் சொல்கிறாள்!
காரணம் என்ன?
எதற்கும் நேரில் போய் பார்த்து—விடலாம்!

ரகசிய ஆபீஸ் எரிந்து கிடந்தது!
இது விபத்து அல்ல! எதிரிகள் தீ வைத்து உள்ளனர்!
தீ அணைப்பு அதிகாரியை 007 சந்தித்தார்.
மிஸ்டர் தாமசை உங்களுக்குத் தெரியுமா? நெருப்பு வெடிகுண்டு டுத்து இருக்கிறார்கள். தாமசுக்கு எதிரிகள் யாராவது உண்டா?
கடை வாடிக்கை யாளன் என்ற முறையில்தான் அவரைத்-தெரியும்.
அவர் மனைவியிடம் விசாரியுங்க!
நேற்று இரவு தாமஸ் இங்கே இருந்த மாதிரி தெரிய-வில்லை.
இப்போது எங்களுக்கு இங்கே உளவு சொல்ல ஏஜெண்ட் யாரும் இல்லாமல் செய்து விட்டனர்

மீண்டும் ஒரு ஓட்டலில் அமர்ந்து பேசினர்
மிஸ்டர் தாமஸ், என் பாதுகாப்புக்கு சில ஆட்களை நியமித்து இருந்தார். அவர்களுடன் தொடர்பு இல்லாமலும் போய் விட்டது! திட்டமிட்ட மிகப்பெரிய சதிவேலை!
சார்! உங்களுக்கும் எனக்கும் ஒரே மாதிரியான ஆபத்து காத்து இருக்கு!
அப்படி என்றால், நாம் வேகமாக செயல்பட வேண்டும்.
மேஜர் கார்டியன்கோ சாகும்போது, ஒரு பெரிய ஒப்பந்தம் நிகழ இருப்பதாக சொன்னார். நினைவு இருக்கா?
அதற்கு ஒரு "மகா சந்திப்பு" நடக்க வேண்டும். அதற்காக நாம் பல மணி நேரம் பயணம் செய்ய வேண்டும்!
நீ குறிப்பிடும் அந்த "மகா சந்திப்பு" எது?
அதை, போகும் போது சொல்கிறேன்
அதுபற்றி நான் முன் கூட்டியே லண்டனுக்கு சொல்ல முடியாதா?
நாம் ஒருவரை ஒருவர் இன்னும் புரிந்து கொள்ள வேண்டும். நீண்ட தூர பயணம் நமக்கு உதவும்!

நமக்கு இப்போது ஒரு படகும், அதை செலுத்த ஒரு ஆளும், தேவை. அதற்கு ஏற்பாடு செய்கிறேன்.
ஏதென்சில் நடந்தது குறித்து சங்கே மொழியில் 007, லண்டனுக்கு தர் கொடுத்தார். அரியட்னே, ரஷ்ய தூதரகத்துடன்தொடர்பு கொண்டாள் பிறகு—
ஜேம்ஸ்! நாம் சந்திக்கப்--போகும் ஆள் கிரேக்க போரில் சண்டைபோட்ட வீரர். என் தகப்பனார், அவருக்கு தளபதி.
அதனால் நாம் சந்திக்க இருப்பவர். நமக்கு உதவி செய்யலாம்,
ஏன் சந்தேகமாகச் சொல்கிறாய்?
பிறகு நடந்த உள்நாட்டு சண்டையில் கம்யூனிஸ்டுகளுக்கு ஆதரவா என் தகப்பனாரும், எதிராக அவரும் போர் செய்தனர்.
எனவே, அவர் இப்போது உதவுவது சந்தேகம், இல்லையா?
தன் தகப்பனாரின் நண்பர் ஆன நிக்கோ என்பவரை அரியட்னே சந்தித்தாள். அவரை ஜேம்ஸ் பாண்டுக்கு அறிமுகம் செய்து வைத்தாள்.
மிஸ்டர் பாண்ட்! கிரீசுக்கு என்ன வேலையா வந்தீங்க?

இங்கிலாந்தையும் ரஷியாவையும் ஏன் கிரீஸ் நாட்டையும் சேர்த்து போரில் ஈடுபடுத்தும் ஒரு சதியை முறியடிக்க உங்க உதவி தேவை!
அரசியல் சமாச்சாரமா? அரியட்னே! நீ நேரத்தை வீண் அடிக்கிறாய்?
நான் அரசியலுக்கு முழுக்கு போட்டு விட்டேன். அதனால் உங்களுக்கு உதவ முடியாது!
அரசியல், அரியட்னேயின் தொழில். இருவரும் ஒரு பொது நன்மைக்--காக சேர்ந்து உள்--ளோம்!
பொது நன்மையோ, உங்க நன்மையோ? எனக்கு அரசியல் தொடர்பே வேண்டாம்!
நிக்கோ நில்லுங்க!
இங்கே என் தந்தை இருந்து இருந்தால், என் நிலையில்தான் இருப்பார்! உங்க உதவி--யை கேட்டு இருப்பார்!
உன் தகப்பனார் எனது அதிகாரியாக இருந்தவர். இப்போதும் நல்ல நண்பர். அவர் பெயரைப் பயன்படுத்தி நீ என்னை நிர்பந்தம் செய்வது தவறு!

மிஸ்டர் நிக்கோ! உலக சமாதானத்துக்கு ஒரு ஆபத்தான செயலில் ஈடுபட உள்ளோம்!
உலக சமாதானமா? உங்க ரெண்டு பேருக்கும் ஆபத்தா?
சரி, விஷயம் என்ன என்று சொல்லுங்க! ஆனா முன்னதாக என்னால் எந்த உறுதியும் தர முடியாது.
ஒரு ஓட்டலில் அமர்ந்துபேசினர்.
ஒரு தீவுக்கு உங்களை நான் கொண்டு போக வேண்டுமா?
அந்தத் தீவில் நடக்கும் முக்கிய சந்திப்புக்கு ஆபத்து! எங்க உளவுத் தலைவர் கடத்தப்பட்டு விட்டார்!
சாரி, இதில் நான் தலையிட விரும்பவில்லை. வேறு யாரையாவது பாருங்க!
சார்! எங்களுக்கு உதவி செய்ய உங்களுக்கு பயமா இருந்தால், விட்டு விடுங்க!

மிஸ்டர் ஜேம்ஸ்பாண்ட்! இந்த மாதிரி பேச்சு என்னிடம் வேண்டாம்!
சார், கொஞ்சம் பொறுங்க. உங்களுக்கு இன்னொர் விஷயம் சொல்கிறேன்!
இதில் வான் ரிச்சர் சம்பந்தப்பட்டு உள்ளார்!
வான் ரிச்சர்?
ஜேம்ஸ்பாண்டுக்கும், அரியட்னேவுக்கும் உதவி செய்ய மறுத்த நிக்கோ, வான் ரிச்சர் என்ற பெயரைக் கேட்டதும் கொதித்து எழுந்தார்.
அந்த கொலைகாரன் இதில் சம்பந்-தப்பட்டு இருக்கி-றானா?
அரியட்னே! அவன் இதில் எப்படி சம்பந்தப்பட முடியும்?
ஜெர்மனியில் இருந்து இங்கே வந்து இருக்கிறார்!
ம்... அவன் இங்கே வந்து விட்டானா? அவனை கவனிக்க வேண்டியதுதான்!
இங்கே படகு துறையில் அவனை பார்த்தேன்.
நான் கூறிய அந்த "சந்திப்பு" நடக்கக்கூடிய தீவு எது என்று அவன் பல படகுகாரர்களிடம் விசாரித்தான்.

அவன் இங்கே உல்லாச பயணியாக வந்து இருப்பான் என்றுதான் நான் நினைத்தேன்.
நீ சொல்வது உண்மைதான். வான் ரிச்சர் போன்ற கொலைகாரர்களால் சும்மா இருக்க முடியாது.
உம்... அரியட்னே! உங்களுக்கு உதவி செய்ய முடிவு செய்து விட்டேன்!
ஜேம்ஸ்! எனக்கு எப்படியாவது வான் ரிச்சரை பிடிக்க வேண்டும். அதனால், படகுடன் வருகிறேன்!
இந்தப் படகை கொண்டு போவோம். இதில் 165 குதிரை சக்தி உள்ள என்ஜின் பொருத்தப்பட்டு உள்ளது.
என்னிடம் ஒரு கை துப்பாக்கிதான் இருக்கு!
மேலே போய், இருங்க. மற்றவற்றை நான் பார்த்துக் கொள்கிறேன்!
படகில்—
ஜேம்ஸ்! அரியட்னே எங்கே?
வருவாள்.

அவள் என் நண்பரின் மகள். அவளை நல்ல முறையில் நடத்துங்க. இல்லை,நான் உங்கள் எதிரி ஆவேன்!
அந்தக் கவலையை விடுங்க!
ஜேம்ஸ்! போதிய உணவு பொருள் இருக்கு. டீசல் இருக்கு. இனி ஆயுதங்களைப் பார்ப்போம்!
எந்திர துப்பாக்கிகள், கைத்துப்பாக்கிகள் கைக்குண்டுகள் இவை உங்களுக்கு எப்படி கிடைத்தன?
கடந்த உள்நாட்டு போரின் போது நான் சேகரித்தவை. பத்திரமாக வைத்து இருக்கிறேன்!
இவன் பெயர் யான். நல்ல பையன். இவனுக்கு இந்தப் படகை ஓட்டத் தெரியும். இந்தப் பகுதி கடல் மற்றும் தீவுகள் பற்றியும் நல்லா தெரியும்!
ஆனால் இவனை சண்டையில் ஈடுபடுத்தக்--கூடாது!

மிஸ்டர் நிகோ! புறப்பட தாமதம் ஏன்?
எந்தத்– தீவுக்கு போக வேண்டும்? நீ இன்னும் சொல்லவே இல்லையே!
சைக்கிளேட்ஸ் தீவுகளை நோக்கி புறப்படுங்கள்போக வேண்டிய தீவு எது என்று வழியில் சொல்கிறேன்!
அப்போது–
அந்தப்–படகில் அவர்கள் புறப்பட்டு விட்டனர். போய் போன் பேசு!
சரி! கடலில் நீண்ட தூரம் வந்து விட்டோம். இனியாவது போக வேண்டிய தீவின் பெயரைச்–சொல்!
அரியட்னோ! வீணாக நீ காலம் தாழ்த்துவது எங்களை அவமதிப்பது ஆகும்!
சரி, கீழே வாங்க. சொல்–கிறேன்.

அந்த "மகா சந்திப்பு" ரகோனிசி என்றத் தீவில் நடக்க இருக்கு!
அங்கே போக 14 மணி நேரமாவது ஆகும்!
கால நிலை சரி இல்லாவிட்டால், அதைவிட அதிக நேரம் ஆகும்!
அரி! அந்தத் தீவில் என்ன நடக்க இருக்கு
அந்தத் தீவில் ரொம்ப காலம் முன்னால் என்ன நடந்தது என்று சொல்கிறேன்!
பழங்கால கிரேக்க கதைகளில் அரியட்னேயின் காதலன் பெயர் தீசுவஸ்.
மினோதார் என்ற அரக்கனை அழித்த தீசுவஸ்?
ஆமா. பிறகு தீசுவஸ் ரகோனிசி தீவுக்கு போனான்.
அங்கே தீ நாக்கு படைத்த ஒரு பூதத்தை அழித்தான்
இப்போ அங்கே இன்னோர் பூதம் தோன்றிஇருக்கு. இல்லையா?

இத்துடன் முதல் பாகம் முடிகிறது. அரியட்னே வெளியிடும் அந்த ரகசியம் என்ன? அதற்கு ஏற்பட்ட ஆபத்து என்ன? லண்டன் உளவுத்துறை தலைவர் எம் என்ன ஆனார்? ஜேம்ஸ்பாண்ட், நிக்கோ, அரியட்னே மூவரும் எதிரிகளை முறியடித்தார்களா? முடிவு என்ன? என்பதை அடுத்த இதழில் இரண்டாம் பாகமாக முழு நீள சித்திரக்கதையாக படிக்கலாம்!

Copyright: Express Newspapers Plc. and Glidrose Publications Limited. LONDON.

சந்தா விபரம்

(தபால் மூலம்)

ஒரு ஆண்டு ரூ. 42-00

ஆறு மாதம் ரூ. 22-00

ஆறு மாதத்திற்கு குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

வி. பி. பி. கிடையாது.

சந்தா அனுப்ப வேண்டிய முகவரி:-

நிர்வாகி,
ராணி சிண்டிகேட்,
1091, பெரியார் நெடுஞ்சாலை,
சென்னை - 600 007.

NOTICE

Statement of Ownership and other particulars about "RANI COMICS", Madras-7.

1. Place of Publication: 1091, Periyar High Road, Madras-600 007.
2. Periodicity of its Publication: Fortnightly
3. & 4 Printer & Publisher's Name: C. Kalyana sundaram,
   Nationality: Indian.
   Address: 1091, Periyar Higd Road, Madras-600 007.
5. Name of Editor: S. Ramajayam
   Nationality: Indian.
   Address: 1091 Periyar High Road. Madras-600 007
6. Name and address of the Owner. M/s RANI SYNDICATE, 1091, Periyar High Road, Madras-600 007.

I, C. Kalyana sundaram hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date: 1-3-87.

Sd/- C. Kalyana sundaram,
PUBLISHER.

உங்கள் கருத்து

உல்லாசக் கப்பல்!

உல்லாசக் கப்பலில் ஜேம்ஸ் தூள்பறத்திவிட்டார். நல்ல விறுவிறுப்பு!

—செ. தமிழ்செல்வி,
நாகர்கோவில்-1.

நாட்டுக்கும் வீட்டுக்கும் கேடு செய்த மிஸ்டர் கிரஸ்டுக்கு கடைசியில் கிடைத்த முடிவு சரியானது. அட்டைப்படம் "டாப்!"

—ம. ஆனந்த்,
பள்ளப்பட்டி (கரூர்).

"உல்லாசக் கப்பல்" பக்கம் 48-ல் ஒரு கணை வலையாக மாறி, ஜேம்சை மடக்கிய காட்சி மறக்கமுடியாதது!

—சி. கணேசன்,
எடக்காடு மட்டம்.

வேவுவீரர் ஜேம்ஸ்பாண்டின் வீரத்துக்கு சவால்விட்ட அற்புதக் கதை "உல்லாசக் கப்பல்!"

—நா. அண்ணாமலை,
உத்தமபாளையம்.

உல்லாசக் கப்பலில் ஜேம்ஸ் பாண்ட் நிகழ்த்திய வீர, தீரச் செயல் சினிமாப் படம் போல் மெய்சிலிர்க்க வைத்தது! பாராட்டுகள்!

—தாமரைமணாளன்,
கைக்கோளபாளையம்.

கதை தொடக்கம் முதல் முடிவு வரை உல்லாசக் கப்பலில் பயணம் செய்த அனுபவத்தைக் கொடுத்தது!

—வி. ரவி,
மொரப்பூர்.

தொட்டால் பளபளப்பு; படித்தால் விறுவிறுப்பு—அதுதான் ராணி காமிக்சின் தனிச்சிறப்பு!

—ச. செய்யது முஸ்தபா,
திருச்சி-8.

விதவை ராணி!

"விதவை ராணி!" சரித்திர தொடர்கதையை, கதை நிகழும் காலகட்டத்தை கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறார், கதை ஆசிரியர் சித்ரா மணாளன்!

—இ. சேகர்,
கைக்கோளபாளையம்.

மாணவர்கள் மட்டும் அல்ல, மற்றவர்களும் படித்து பயன் அடையக் கூடிய ஒப்பற்ற தொடர்கதை, "விதவை ராணி!"

—டி. எம். சாகுல் அமீது,
பள்ளப்பட்டி.

ஒரு விதவையை கதாநாயகியாகத் தேர்ந்து எடுத்து, கதையை நடத்திச்செல்லும் சித்ரா மணாளனை எவ்வளவு பாராட்டினாலும் தகும்!

—எல். ஆர். சிவக்குமார்,
மதுரை-1.

மன்னர் தாஜ்கானை இளவரசனே கொன்றது, என்னை திகைக்க வைத்தது!

—எஸ். ஜைனுல் லாபுதீன்,
பள்ளப்பட்டி.

மற்ற புதினங்களைவிட வரலாற்றை அடிப்படையாக வைத்து புனையப்படும் புதினங்களுக்கு எப்போதும் மதிப்பு உண்டு. அந்த வகையில் "விதவை ராணி"யை வரவேற்கிறேன்!

—புலவர் மதிவாணன்,
சென்னை-4.

சில வரலாற்று தொடர்கதைகள் "வள்வள" என்று ஜவ்வு மிட்டாய் போல் இருக்கும். ஆனால், "விதவை ராணி" சரித்திரக்கதை ஆனாலும் விறுவிறுப்புக்கும் வேகத்துக்கும் கொஞ்சமும் குறைவில்லை!

—பி. ஜே. முன்னிராபானு,
பள்ளப்பட்டி.

ரூ. 50- பரிசு: கருத்துப் போட்டி-57

"ரகசிய மாநாடு!" சித்திரக் கதையை படித்துவிட்டீர்கள் அல்லவா? இனி இந்தக் கதையில், 52-ம் பக்கத்தில், "இருதரப்பும் சேர்ந்து செயல்படவேண்டும்!" என்று அரியட்னே கூறுவது பற்றி உங்கள் கருத்தை, "ராணி காமிக்ஸ்", ஒரு பக்க அளவுக்கு மிகாமல், எழுதி அனுப்புங்கள்.

மிகச் சிறந்த கருத்துக்கு ரூ. 50 பரிசு வழங்கப்படும்.

தேர்ந்து எடுக்கப்பட்ட கருத்து 1-4-87 இதழில் பிரசுரிக்கப்படும்.

கருத்து போட்டி நிபந்தனைகள்:—

(1) கருத்துக்கள் எங்களுக்கு வந்து சேரவேண்டிய கடைசி தேதி: 10-3-87.
(2) போட்டியில் கலந்து கொள்ள வயது வரம்பு கிடையாது.
(3) போட்டியில், ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. சட்டப்படி கட்டுப்படுத்த முடியாது.
(4) கீழே உள்ள பாரத்தை பூர்த்தி செய்து, "கருத்து"டன் சேர்த்து அனுப்ப வேண்டும். அது இல்லாமல் வரும் கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளப் படமாட்டா.

ராணி காமிக்ஸ்

முகவரி:-
கருத்துப்போட்டி,
"ராணிகாமிக்ஸ்"
1091, பெரியார்
நெடுஞ்சாலை,
சென்னை-600 007

கருத்துப் போட்டி எண்: 57

பெயர்:..................................

முகவரி: ....
....
....
....

போட்டி நிபந்தனைகளுக்கு கட்டுப்படுகிறேன்.

....

(கையொப்பம்)

ராணி சிண்டிகேட் சார்பில் அச்சிட்டு, வெளியிட்டவர்: சி. கல்யாணசுந்தரம், ராணி அச்சகம், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007. ஆசிரியர்: எஸ். ராமஜெயம் பி. ஏ. 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007.

கருத்துப் போட்டி எண்: 55 முடிவு!

"உல்லாசக் கப்பல்!" சித்திரக்கதை கருத்துப் போட்டியில், லிஸ், தன் கணவரைப் பழிவாங்கிவிட்டதாகக் கூறிய கட்டம் பற்றி கருத்தை கேட்டு இருந்தோம். போட்டியில் கலந்துகொண்டவர்களில் பாராட்ட தகுந்தவிதத்தில் கருத்துக்களை எழுதி இருந்தவர்கள் வருமாறு:—

திருமதி. பாக்கியம் (பேளூர் குறிச்சி), எஸ். ரவிக்குமார் (கடலூர்-1), எஸ். சகுந்தலா (நொச்சிக்குட்டை), எஸ். மகாலட்சுமி (திருப்பத்தூர்), ரா. முருகப்பன் (விருத்தாச்சலம்), கோ. சிவசங்கரி (சிதம்பரம்), செ. தமிழ்செல்வி மின்சிவா (நாகர்கோவில்-1), என். சங்கர் பி.ஏ. (சிங்காரப் பேட்டை), ப. கிரிராஜா (சத்தியமங்கலம்), தன. பஞ்சமூர்த்தி (சிதம்பரம்-1).

ஆனால் மிகச் சிறந்த கருத்தை எழுதி, ரூ. 50 பரிசு பெறுபவர்:—

பி. செல்லம்மாள்,
114, மெக்னிக்கல்ஸ் ரோடு,
சேத்துப்பட்டு,
சென்னை-31.

அவரது கருத்து வருமாறு:—

"அலுவலகத்தில் 'வரவேற்பாளர்' பணிக்கு வரும் பெண்கள் இயல்பாக அழகும், மென்மையும், புன்சிரிப்பும் உடையவர்களாக இருப்பார்கள்... பிறர் துன்பத்தில் இன்பம் அடையும் மனநோயாளியான கிரஸ்ட், லிசை ஐந்தாவது மனைவியாக்கி, அடக்கமுடியாத துன்பத்தை கொடுத்தான்! மனைவி என்றும் பாராமல் பல இடங்களில், பலபேர் முன்னால் அவமானப்படுத்தினான்.

இளமை கனவுகளையும், பணவசதியும் பெற்று வளமாக வாழலாம் என்று கற்பனை செய்த மிஸஸ் லிஸ், படுக்கையறையில் கிரஸ்டால் சுறாவாலால் அடிபட்டும், நெருப்பால் சுடப்பட்டும் சித்திரவதைப்பட்டு சகிப்புடன் வாழ்க்கை நடத்தியிருக்கிறாள்!

திருமணம் முடிப்பதும், தீயவழிகளில் ஈடுபடுத்துவதும்தான் ஒருவனுக்குப் பொழுதுபோக்கு என்றால், அவன் எப்படிப்பட்டவனாக இருக்கமுடியும்? ஐயா, அவன் எப்படி வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போகட்டும்... 'பேய்க்கு வாழ்க்கைப்பட்டால் முருங்கைமரம் ஏறத்தான் வேண்டும்' என்று பொறுத்துக்கொள்ளுவாள். முருங்கைமரம் ஏறச்சொன்னால் பரவாயில்லை... ஆனால் அந்தப் பேய் கடித்துக் குதறி ரத்தம் குடிக்க வந்தால், என்ன செய்யமுடியும்...?

சரி...! அவனிடமிருந்து விடுதலை பெறவேண்டும் என்று விவாக ரத்து வாங்கினால், லிஸ்சால் உயிரோடு வாழ்ந்துவிட முடியுமா? அவனோ ஓர் பயங்கரவாதி! ஒரு நாட்டின் ராணுவ அணு நீர்மூழ்கிக் கப்பலையே எளிதாக கடத்தக் கூடியவன், எதைத்தான் செய்யமாட்டான். கிரஸ்ட், லிஸ்சை உருத் தெரியாமல் ஒழித்துவிடமாட்டானா?

எனவே, சித்திரவதையே வாழ்க்கை என்று வாழ்ந்துவந்த மிஸஸ் லிஸ் துணிந்தாள்! பதுமையாக இருந்த அவள் பாம்பாக சீறி கிரஸ்டை கொலை செய்தாள்! சுறாவால் அடிபட்டு துடித்திட்ட அவள் அனுபவமே, "என் கணவரைப் பழிவாங்கிவிட்டேன்" என்று சொல்லவைத்தது.

கொலை வெறி கொண்டு குதிக்கும் மிருகத்தைக் கொல்லுவதும் குற்றம் என்று சட்டம் கூறினால், மிஸஸ் லிஸ்சை சட்டம் தாராளமாக தண்டிக்கட்டும்!"

— இவ்வாறு பி. செல்லம்மாள் கூறி உள்ளார்.

RANI COMICS
(TAMIL FORTNIGHTLY)

Regd. No. TN/MS(N)/461

ராணி காமிக்ஸ்

அடுத்த இதழில்...!

007 ஜேம்ஸ் பாண்ட்

துப்பறியும்,

ரகசிய மாநாடு

இரண்டாம் பாகம்

முழு நீள சித்திரக் கதை

சித்ரா மணாளன் எழுதும்

விதவை ராணி!

சரித்திரத் தொடர்கதை

ரூ.50 பரிசு வாசகர் போட்டி!

படிக்கத் தவறாதீர்கள்!

ராணி காமிக்ஸ்

15.3.87-ல் வெளி வருகிறது!

PRINTED AT RANI PRINTERS, MADRAS-7